IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.No.116/2025 - PW-2

Name	திரு. ரகு
Husband/Father Name	அப்பாதுரை
Village /Area	ஜம்புகுளம்
Taluk	சோளிங்கர்
Occupation	அரசு பேருந்து நடத்துநர்
Age	49
Religion	

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 23.03.2026.

(எதிரி ஆஜர்).

முதல் விசாரணை :

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 02.11.2021 அன்று இரவு 10 மணியளவில் ஆற்காட்டிலிருந்து சோளிங்கர் நோக்கி TN23 N1814 என்ற பேருந்தை இயக்கி வந்து கொண்டிருந்த போது அதில் நான் நடத்துநராக பணியில் இருந்தேன். ஜம்புகுளம் கூட்ரோடு SKV Matriculation பள்ளி அருகே அடையாளம் தெரியாத நபர் புளியமரத்தின் பின்புறத்தில் இருந்து நாங்கள் வந்து கொண்டிருந்த பேருந்தின் முன்பக்க கண்ணாடி மீது கல்லால் அடித்ததால் பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்தது. இது குறித்து எங்கள் உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துவிட்டு சேதமடைந்த பேருந்தினை பணிமனையில் எடுத்து வந்து நிறுத்திவிட்டு அதன் பிறகு கொண்டபாளையம் காவல் நிலையத்தில் இந்த சம்பவம் குறித்து என்னுடன் பணியிலிருந்த ஓட்டுநர் ஆனந்தன் என்பவர் புகார் அளித்தார். பிறகு சம்பவ இடம் சென்று அக்கம் பக்கத்தில் விசாரித்த போது நீலகண்டராயன் பேட்டையை சேர்ந்த ஆனந்தன் மகன் பாண்டியன் என்பவர் தான் பேருந்தின் முன்பக்க கண்ணாடியை உடைத்தவர் என்பது தெரிய வந்தது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.23 18:52:28 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.